பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு, 2032 மாசி 07 திங்கட்கிழமை (19-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 62

★ நிர்வாகச் சீர்குலைவு ☆ பழி வாங்கல் ★ தகாத வார்த்தை

## யாழ். மாநகர ஆணையாளரை உடனடியாக இடம்மாற்றுக
## தொழிற்சங்கங்கள் இணைந்து போர்க்கொடி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையில் பதவியேற்றுள்ள புதிய ஆணையாளரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு கோரி மாநகரசபையின் தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன வாம்.

புதிதாகப் பதவியேற்றுள்ள ஆணையாளரின் அடாவடித்தனத்தையும் பழிவாங்கலையும் இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என கருத்துத்தெரிவித்த தொழிற்சங்கப் பிரதிநிதியொருவர் யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனின் ராஜினாமாவை மாநகர நிர்வாகம் தடுத்து நிலைமையை சுமுகமாக்காவிட்டால் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இறங்கி சபையை ஸ்தம்பிதமடையச் செய்யப்போவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை புதிய ஆணையாளரை கடமை நிமித்தம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### சமாதானச் செய்தியுடன், 32 பிக்குகள்:4 ஆயர்கள் 4 குருமார்கள்
# விடுதலைப்புலிகளின் தலைவர்களை
# சந்திக்க இன்று வன்னி பயணம்!

## அகதி முகாம்களையும் பார்வையிடுவர்

(வவுனியாவில் இருந்து ரி விவேகராசா)

**இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்று விரும்புகின்ற தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் 40 மதகுருமார் அடங்கிய குழுவொன்று இரண்டு நாள் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு இன்று புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான வன்னிக்கு செல்லவுள்ளனர்.**

**தென்னிலங்கை மக்களின் முக்கிய சமாதானச் செய்தி ஒன்றையும் தம்முடன் எடுத்துச் செல்லும் இக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பெறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் புலிகளின் இயக்க முக்கியஸ்தர் கரிகாலன் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.**

தென்னிலங்கையைச் சேர்ந்த சமாதனத்தை விரும்பும் ஆயர்கள் கத்தோலிக்க குருமார்கள் அதியுயர் பௌத்த பீடங்களைச் சேர்ந்த பிக்குகள் அடங்கிய குழுவினர் வன்னிக்குச் செல்வதற்காக நேற்று காலை 10 மணியளவில் வவுனியா வந்து சேர்ந்துள்ளனர்.

வவுனியாவந்து சேர்ந்துள்ள இச் சமாதானக் குழுவினர் வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள போதிதக்ஷிக விகாரையில் தங்கியுள்ளனர்.

இந்தச் சமாதான தூதுக் குழுவில் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிவண மல்கம் ரஞ்சித், வடக்கு கிழக்கு மாகாணசங்கநாயக்கர்சியம்பகஸ்பவவிமலசாரதேரர், மன்னார்மறைமாவட்ட ஆயர்அதிவணஇராயப்பு யோசப், யாழ் மறைமாவட்டஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் உட்பட சமாதா

(8-ம் பக்கப் பார்க்க)

## சிற்றி ஒவ் றிங்கோ நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

சிற்றிஒவ்றிங்கோ பயணிகள் கப்பல் கப்பல்400 பயணிகளுடன் நாளை செவ்வாய்க் கிழமை காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்குப்புறப் படும்.

இக்கப்பலில் பயணம்செய்ய பயணஅனுமதி பெற்றவர்களுக்கான பயணச்சீட்டுக்கள் இன்று காலைமுதல் யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம் கட்டடத்தில் இயங்குப்ரான் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென்று ரான் அலுவலக அதிகாரி எஸ். குகராஜன் தெரிவித்துள்ளார். (இ)

## மூன்று எலும்புக் கூடுகள் மன்னாரில் மீட்பு

(மன்னார்)

தலைமன்னார் வீதி நான் காம்பிட்டியிலுள்ள காட்டுப் பகுதியில் மூன்று மனிதஎலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளது.

மணல் எடுப்பதற்காக மன்னாரிலிருந்து உழவுஇயந்திரத்தில் சென்றவர்களேஇம்மனித எலும்புக் கூடுகளைக்கண்டுள்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சட்டத்தைத் தளர்த்தி எம்மை விடுதலை செய்க
### 125 கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வுச் சட்டம் திருத்திஅமைக்கப் பட்டதைஅடுத்து ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 125தமிழர்கள் பிணையில் வரமுடியாத நிலையில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

திருத்தி அமைக்கப்பட்ட சட்டத்தின்விதிகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப் பட்டு வருவதாலேயே இவர்கள் பிணையில் வெளிவரமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

நீர்கொழும்புசிறைச்சாலையிலும், வெலிக்கடைச்சிறைச் சாலையில்உள்ள பெண்கள் பிரிவிலுமே இவர்கள்தடுத்து

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத தடைச்சட்டம் இன்று பிரிட்டனில் நிறைவேற்றப்படும்!

(லண்டன்)

பயங்கரவாத அமைப்புக்களை தடை செய்யும்தீர்மானம் இன்று பிரித்தானிய பாராளுமன்றில் நிறைவேற்றப்படவுள்ளது. எனினும் உடனடியாக பயங்கர வாத அமைப்புக்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப் படமாட்டாதென பிரித்தானிய உள்துறையமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்புக்கள் இரண்டு பிரிவுகளின் கீழ் தடைசெய்யப் படுமென்று தெரிவித்த அவ்வதிகாரி உள்நாட்டு பயங்கரவாத அமைப்புக்கள் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களென்ற ரீதியில் அது அமையும் என்

→ 8ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய தூதுக்குழுவை தமிழ்க்கட்சிகள் சந்திக்கும்

(கொழும்பு)

ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரை பத்துத் தமிழ்க் கட்சிகளும் நாளை 20ந் திகதி சந்திக்க ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக இலங்கையிலுள்ள ஐரோப்பிய யூனியன் தூதுவர் அறிவித்துள்ளதாக ரெலோ முதல்வர் எம். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது பிரிட்டன் விடுதலைப் புலிகளை தடைசெய்யக் கூடாது என்றும், விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள ஒரு தலைப்பட்ச

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## 3-வது தடவையாகவும் யுத்த நிறுத்தத்தை புலிகள் அறிவிப்பார்கள் யாழ். ஆயர் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளின் நல்லெண்ண அடிப்படையில் மூன்றாவது தடவையாகவும் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பை வெளிவிடுவார்கள் எனத்தான் நம்புவதாக யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் நேற்று நமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வன்னிசென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப்பேசிய போதே அவர் யுத்தநிறுத்த நீடிப்புப்பற்றி சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானமுயற்சியை உறுதியானமுறையில் கையாண்டு வருவதுடன் நல்லெண்ண அடிப்படையில்யுத்தநிறுத்தத்தையும் செய்துவருகின்றனர்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

### சமாதானத்தை வலியுறுத்தி
# அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் அவசர மகஜர்கள் அனுப்பி வைப்பு

(ஏறாவூர்)

யுத்தத்தை நிறுத்தி பூமியை பாதுகாப்போம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 12 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் கையெழுத்துடன் கூடிய மகஜர்களை அனுப்பி வைத்துள்ளன.

விடுதலைப் புலிகளிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்ட மேற்படி மகஜரில் 8 ஆயிரத்து 530 கை ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிது.

தடாகம் சேதன விவசாயிகள் சங்கம், உழைக்கும் கரங்கள், கொறளைப்பற்று அபிவிருத்தி ஒன்றியம் உட்பட பன்னிரண்டு அமைப்புகளூடாக இந்த கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்திற்கான மகஜர் மட்டக்களப்பு அரச அதிபர் வி.மௌன குருசாமியிடம் மன்று நிறுவன இணைப்பாளர் கிறிஸ்தோப்பரினால் கையளிக்கப்பட்டது:

விடுதலைப் புலிகளுக்கான மகஜர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக மன்று நிறுவன போச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(க-05)

## வெளிநாட்டு சிகரெட்டை கடத்தியவர் கைதானார்

[கொழும்பு]

மூன்று இலட்ச ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரெட்டுக்களை சட்ட விரோதமாக நாட்டுக்குள் கடத்த முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கட்டு நாயக்காசுங்கப் பகுதியினர் கைது செய்துள்ளனர்.

இவர் மாலைதீவில் இருந்து நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறங்கிய போதே இவரிடம் இருந்து பெரும் தொகை சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதாக சுங்க அதிகாரி கே. ஜே. கே. சுபசிங்க தெரிவித்துள்ளார். (க-04)

## அம்புலன்ஸ் வண்டி இல்லை நோயாளர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வன்னி முழங்காவில் "சுற்றயல் கூறு" மருத்துவமனையில் நோயாளர் அம்புலன்ஸ் வண்டி இல்லாததால் இம் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சை பெறுவதற்கு பெரும் சிரமப்பட்டுவருகின்றனர்.

இந்த மருத்துவ மனையில் பயன்படுத்தப்பட்டு வந்த ஒரே ஒரு அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் கூட இதுவரையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மேலும் அறியப்படுகிறது.

உதிரிப் பாகங்கள் எடுத்து வரப்படாமையே வண்டி திருத்தப்படாமைக்கு காரணம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது விடயம் குறித்து சம்பந்தப்பட்டோர் எதுவித அக்கறையும் செலுத்தவில்லை என்றும் நோயாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது (க-07

## கொள் கலன் பாரம்தூக்கி கப்பலுடன மோதியது

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் யால கொள்கலன் இறக்கும் பாரம் தூக்கி கப்பல் ஒன்றுடன் மோதி சேதம் அடைந்துள்ளது.

இதனால் ஏற்பட்ட சேத விபரம் 90 கோடி என துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொள்கலன் இறங்குதுறையில் கொள்கலக் கப்பல் நங்கூரம் இட்ட சமயமே இச் சம்பவம் நடைபெற்றது.

இந்தக் கப்பல் எவக்கிறீன் என்னும் பிரபல கப்பல் நிறுவனத்திற்கு சொந்தமானது.

இதே சமயம் இந்த காள் கலன் இராட்சத பாரம் தூக்கி. ஜப்பானில் இருந்து கொள்வனவு செய்யபபட்டதில் ஒன்றாகும்.

இவ் விபத்துக் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சேதத்திற்கான காப்புறுதிக் கட்டணம் செலுத்தும் வரை இக்கப்பல் துறைமுகத்தில் இருந்து வெளியேற்றப்படமாட்டாது என துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

(க-07)

## யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பொது மக்கள் மற்றும்பொது அமைப்புகள் எதிர் நோக்கும் பிரச்சினைகட்கு தீர்வு காண விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மக்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை பிரதி புதன், மற்றும் வியாழக்கிழமைகளிலும் பொது அமைப்புகளின் பிரச்சினைகளை பிரதி செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் காலை 8 மணிமுதல் மாலை 3 மணி வரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் எடுத்துக் கூற ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (க-9)

## பாம்பு தீண்டியதில்இருவர் வைத்தியசாலையில்

(மந்திகை)

ஒரே நாளில் இரு வேறு இடங்களில் பாம்புக் கடிக்குஇலக்காகியவர்கள் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரவெட்டிப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது பாம்புதீண்டியதில் செ. நடராஜா (வயது 65) என்பவரும்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் மேசன் வேலைசெய்து கொண்டிருந்த போது பாப்பு தீண்டியதில் கு.பாலச்சந்திரன் (வயது-39) ஆகிய இருவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். [செ-23]

## ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருட்டு

வட்டுக்கோட்டை - றாத்தலடிப் பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருடர்குழு ஒன்று தம்கைவரிசையைக் காட்டியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேற்படி பகுதியிலுள்ள ஒரு வீட்டில் சந்தடி இன்றி ஜன்னல் பிரித்து உட்புகுந்த திருடர்கள் பத்துப்பவுண் கொண்ட தாலிக்கொடி ஒன்றையும், சுமார் 8அயிரத்து 500ரூபா பணத்தையு ம்மற்றுமொருவீட்டில் 'டெக்' கருவி மற்றும் தங்கச் சங்கிலி ஒன்றையும் வேறொரு வீட்டில் தோடு ஒன்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஒரு குழுவினரே மூன்று திருட்டுக்களில் ஈடு பட்டிருக்கலாமென அப்பகுதி வாழ் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்:

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது: (க-124)

## கொடிகாமம் பாடசாலை வதிரியில்

(துன்னாலை)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன் கருதி வதிரி உடுப்பிட்டி வீதியில் அமைந்துள்ள கேமபிறிஜ் கல்விநிலையத்தில் கொடிகாமம் யா/திருநாவுக்கரசுமகாவித்தியாலயம இன்று முதல் காலைநேரப் பாடசாலையாக நடத்துவதற்கு தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

இப்பாடசாலையில் தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த எந்த மாணவர்களும்கல்விகற்கலாம் எனதென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-41)

## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்ட பேரணி

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடைபெற்றது. இந்தப் பேரணி அக்கராயனில் இருந்து ஆரம்பமாகி ஸ்கந்தபுரத்தில் முடிவடைந்துள்ளது

வன்னிக்கான பொருளாதாரத் தடையை தீர்க்கவும், சமாதானத்தை ஏற்படுத்தவும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

(உ)

## பாதுகாப்பு படையினரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரி தினத்தன்று கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் வழிபாடியற்றவும் சமயச் சடங்குகளை நடத்தவும் பூரண ஏற்பாடுகள மேற்கொள்ள ஒத்துழைப்பு நல்கும்படி யாழ்ப்பாண மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் பாதுகாப்புப் படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (உ)

## சடலம் கையளிப்பு

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் நந்தாவில் பகுதியில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சேதுநாதன் காண்டீபன் என்பவரின் சடலம் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது. (க-12)

## விபத்தில் படுகாயம்

(மந்திகை)

கரவெட்டி மூத்தவிநாயகர் கோவிலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை உழவு இயந்திரம் ஒன்றுவிபத்துக்கு உள்ளாகியதில் படுகாயமடைந்தவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாயைச் சேர்ந்த வ. ஆனந்தகுமார் (வயது-40) என்பவரே விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(செ-23)

## கொழும்பு வத்தளையில் பெரும் தேடுதல்
### 40 தமிழர் கைதாம்

(கொழும்பு)

கொழும்பு வத்தளைப் பகுதியில் இலக்கந்த வெலியமுல்ல பகுதிகளில் அண்மையில் தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்ட படையினர் சுமார்400 இற்கும் மேற்பட்ட தமிழர்களை விசாரணைக் குட்படுத்தினர்

இவர்களில் சுமார் 40 பேர் விசாரணையின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், புறக்கோட்டைப் பகுதியிலும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது. க-வ]

## வவுனியா வளாகத்தில் கையெழுத்து பேரர்

(வவுனியா)

பிரித்தானிய அரசு விடுதலைப்புலிகளை தடைசெய்யக் கூடாதென வவுனியா பல்கலைக்கழக வளாமாணவர்கள் வளாகத்தில் ஆரம்பித்த கையெழுத்து வேட்டை இராணுவத்தினரால் பலக்த அச்சுறுத்தலின் மத்தியிலும் வெற்றியீட்டியுள்ளதாக மாணவ மன்றத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில். கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டிருந்த 3 மாணவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுஅச்சுத்தல் விடப்பட்ட போதிலும் சுமார் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அரசசார்பற்ற பிரதிநிதிகள் ஆகியோர் மகஜரில் ஒப்பமிட்டுள்ளார்கள்.

இம் மகஜர் இன்றுஇலங்கையில் உள்ள பிரிட்டிஸ்தூதுவரூடாக, பிரிட்டிஸ் பிரதமரொலுபிளேயருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்றும் மாணவ மன்றப் பிரதிநிதிகள் வலம்புரிக்கு தெரிவித்துள்ளார்கள்.

(க-ம)

## தபாலக ஊழியருக்கு விரைவில் நீலநிற சீருடை

(கொழும்பு)

இலங்கை தபால் திணைக்களத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் புதிதாக நீல நிற சீருடைகளை அறிமுகப்படுத்தப்போவதாக தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்கள ஊழியர்களினதும் அவர்களது தொழிற்சங்கங்களினதும் வேண்டுகோளுக்கு அமையவே இப் புதிய சீருடையை அறிமுகப் படுத்தப் படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-03)

## நான்கு போட்டிகளில் இலங்கை அணி வெற்றி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் இடம் பெற்ற ஐந்து ஒரு நாள் போட்டியில் நான்குபோட்டிகளில் வென்று வெற்றிகிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இதேவேளையில் தென் ஆபிரிக்காவில் இடம் பெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், நான்கு ஒரு நாள் போட்டியிலும்இலங்கை கிரிக்கெட் அணி தோல்வியை தழுவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-ப)

## சம்பள அதிகரிப்பு உடன் சாத்தியமில்லை

[கொழும்பு]

நாட்டின் பொருளாதார நிலை மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதால் சம்பள உயர்வு குறித்து யோசிக்கும் நிலையில் ஜனாதிபதி இல்லை.

இவ்வாறு பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் கண்டு பொருளாதாரத்தில் ஸ்திரத் தன்மையை உருவாக்குவதிலேயே அரசு முழுக்கவனம் செலுத்திவருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். [செ]

# 400 ரூபா சம்பள உயர்வு கோரி

# ஹற்றனில் இன்று அகிம்சைப் போர்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கான 400 ரூபா சம்பள உயர்வு கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்காக இன்று ஹற்றனில் சத்தியாக் கிரகப் போராட்டமொன்றை நடத்தவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதன் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தியது.

இது எவ்வித பலனையும் அளிக்காததால் அகிம்சை ரீதியாக தமதுபோராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அக்கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சகல பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொள்ளவுள்ளதாக மலையக செய்திகள் தெரிவித்துள்ளன.

(க-09)

## பின்தங்கிய கிராமங்களுக்கு மின் விநியோகம்

(நல்லூர்)

நல்லூர்பிரதேச சபை,பின்தங்கிய கிராமங்களுக்கான மின் விநியோக விஸ்தரிப்பை 6 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பித்துள்ளது.

திருநெல்வேலிதொழிலாளர் விடுதி வீதி,மகாத்மாஜி வீதி, கொக்குவில் மயான வீதி, பூநாறிமரத்தடி கலைவாணி சனசமூக நிலைய வீதி, கொக்குவில் மேற்குஐயனார்குறுக்கு வீதி, கொக்குவில் கிழக்குமகா ஜிசனசமூக நிலையவீதிஎன்பனமின்விநியோக விஸ்தரிப்பு மூலம் பயன் பெறவுள்ளன.

(உ-103)

## விளக்க மறியலில் இராணுவச் சிப்பாய்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலிப்பகுதியில் பாலியல்வல்லுறவில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முன் நிறுத்தப்பட்டார்.

துடுவன் பேடி அஜீத்குமார என்ற இராணுவ சிப்பாய்யே இம்மாதம்28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரஸ்தாப சிப்பாய்கடந்த வருடம் ஆகஸ்ட் மாதமளவில் 40 வயதுப் பெண்மணியுடன் பாலியல் தொடர்பு வைத்திருந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது பிணை மனு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-12]

## சமாதானம் வேண்டி நற்கருணை ஆராதனை

[மன்னார்]

இலங்கையில் சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதைக்கருத்தில்கொண்டு இலங்கை ஆயர் மன்றம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் உள்ள பங்குத் தேவாலயங்களில் நேற்று முன்தினம் மாலைநற்கருணை ஆராதனைகள் இடம்பெற்றுள்ளன.

இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் மடுமாதா தேவாலயத்தில் நற்கருணை ஆராதனையும் பின் ஒருமணி நேர பிரார்த்தனையும் இடம் பெற்றுள்ளதாக மன்னார் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(க-4)

## 47 இலங்கையர் இத்தாலியில்கைது

[மட்டக்களப்பு]

சட்ட விரோதமாக இத்தாலியின் சிசிலிக் கரையோரத்தைச் சென்றடைந்த 47 இலங்கையர்கள் இத்தாலிய கரையோர காவல்த்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த மீன்பிடி வள்ளம் எரிபொருள் முடிவடைந்ததனால் சிசிலிக் கரையோரத்தில்தத்தளித்துக் கொண்டிருந்தது அப்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கைவெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இதே வேளை கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவின் கஸகஸ்தான் பகுதியில் முகவர்களால் கைவிடப்பட்ட 24 இலங்கைத் தமிழர்கள் வழி தெரியாது குளிரால் மரணமடைந்த ஒருவரின் உடலையும் சுமந்தவாறு அலைந்ததும் அவர்களை ரஷ்யப் பொலிஸார் கைதுசெய்து புதுடெல்லி ஊடாக இலங்கைக்கு திருப்பியனுப்பியமையும் ஏற்கனவே தெரிந்ததே.

(இ)

## சங்கத்தானை, மீசாலை, கொடிகாமப் பகுதிமக்கள் விரைவில் மீள் குடியேற்றம்

(கல்வயல்)

படையினரால் மீட்கப்பட்ட பகுதிகளான சங்கத்தானை, மீசாலை, கொடிகாமப் பகுதி மக்கள் படிப்படியாக மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர் என கொடிகாமம் 52 வது படைப்பிரிவின் அதிகாரி கொடிகாமம் படைப்பிரிவு அலுவலகத்தில் நடைபெற்ற கிராம சேவை அலுவலர்களுக்கான கூட்டத்தில் தெரிவித்தார்.

இதுபற்றிய விபரமான அறிவித்தல்கள் உத்தியோக பூர்வமாக விரைவில் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்படும் எனவும், சாவகச்சேரி நகர், கல்வயல், நுணாவில், மட்டுவில் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரக் கூடிய வகையில் வசதிகள் இல்லை எனவும் அவர்கள் தமதுகிராம அலுவலர் பிரதேச செயலர் ஊடாக தமக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து வீடுகளைப் பார்வையிட்டு கிராம சேவை அலுவலர் கண்காணிப்புடன் உடைமைகளை மீட்டுவர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்

(உ-111)

## பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். கிறீன்கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3 30 மணிக்கு கழக கூட்ட மண்டபத்தில் உப தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

[உ]

## இராசி பலன்

19-02-2001
(மாசி 7, திங்கள்)
துவாதசி முழுவதும்
பூராடம் மு இ 10 07 வரை
இராகுகாலம் 8.02- 9 32
சுபநேரம் 12.32- 2.02
சித்தம்.

**மேடம்**
காரியம் கைகூடும், கட்டுப்பாடு, பிரயாணம், வியாதி·

**இடபம்**
உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம், அமைதிக் குறைவு, கடன் பளு.

**மிதுனம்**
சுவாரசியம், பிரயாணம், முயற்சி வெற்றி, விருந்துபசாரம்.

**கடகம்**
புதிய முயற்சி, பகைவர் விலகுவர், நோய் குணமடைதல், தனவரவு.

**சிங்கம்**
ரோகம், காரிய தாமதம், புத்திர சோகம், கௌரவக் குறைவு.

**கன்னி**
உறவினர் மனஸ்தாபம், திடீர் நன்மை, துணிவு குறைதல், காரியம் கைகூடும்.

**துலாம்**
வாக்கு மேன்மை, இனிய சம்பவம்,பிரயாணம், முயற்சி வெற்றி.

**விருச்சிகம்**
வாக்குக் கலகம், பொருள் விரயம், காரிய தாமதம், செல்வாக்குக் குறைவு.

**தனுசு**
போசன சுகம், மதிக்கப்படுதல், புதிய நன்மை, அமைதியான நிலை.

**மகரம்**
அமைதிக் குறைவு, சுக செலவு, உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம்.

**கும்பம்**
நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், மதிக்கப்படுதல், முயற்சி வெற்றி.

**மீனம்**
பெரியோர்சந்திப்பு,முயற்சி கைகூடும், மேன்மை, தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## போட்டிக்குச் சென்றவர் வைத்திய சாலையில்

(மந்திகை)

பாடசாலையில் நிகழ்ந்த மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இரு மாணவர்களை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக இவர்கள் சென்றசமயமேமேற்படி விபத்து இடம் பெற்றது.

கி சுதாகரன் வயது 19, ப. குருபரன் வயது 19 ஆகிய இருவருமே விபத்திற்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

(செ 23)

## மீன் பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இரவு 8 மணியளவில் மீன் பிடிக்கச் சென்றவர் காலை செம்பணிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

கணபதிப்பிள்ளை சண்முகநாதன் (வயது 50,106 செம்மணி வீதி நாயன்மார் கட்டு) என்பவரே கடந்த 17 ஆம் திகதி இரவு தனது வீட்டுக்கு அண்மையிலிருந்த குளத்திற்கு வழமை போன்று வீட்டுத் தேவைக்காக மீன் பிடிக்கச் சென்றார்.

இரவு 8 00 மணியாகியும் பிரஸ்தாப நபர் வீடு திரும்பாததையடுத்து உறவினர்களால் தேடுதல் மேற்கொண்ட போது வலைகளுள் சிக்குண்ட நிலையில் சடலம் குளத்திலிருந்து மீட்கப்பட்டது.

யாழ் போதனா வைத்திய சாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணையை சட்டத்தரணி இளங்கோவன் மேற்கொண்டார்.

(க-12)

## சென். சாள்ஸ் ஆரம்ப பாடசாலை அபிவிருத்திக்கு பழைய மா.சங்கம் முயற்சி

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள சென் சாள்ஸ் ஆரம்ப பாடசாலையின் அபிவிருத்தி குறித்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது விடயம் தொடர்பாக யாழ் புனித சாள்ஸ் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் சம்பந்தப்பட்டோரது இல்லங்களிற்கு சென்று கலந்துரையாடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் மேற்படி பாடசாலையில் அண்மையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதும் பெறுமதி மிக்க உபகரணங்கள்,ஓடுகள் என்பன களவாடப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

(க-110)

## பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் வீட்டுத் தோட்ட திட்டம்

(தென்மராட்சி)

சர்வதேசஅரசசார்பற்றநிறுவனமாகிய பட்டினிக்கு எதிரான இயக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் மொத்தம் 6 ஆயிரம் பயனாளிகளுக்கான வீட்டுத் தோட்டத்திட்டத்தினை அடுத்த மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தவுள்ளது.

பருத்தித்துறை,கரவெட்டி, உடுவில்,சங்கானை, நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் இத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு திட்டச் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டு வருவது தெரிய வருகிறது.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் ஒன்பது வகையான விதைகள் வாளி,மண்வெட்டி மற்றும் கத்தி போன்றவை உள்ளீடுகளாக வழங்கப்படவுள்ளன.

திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவில் இடம்பெயர்ந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-77)

## யாழ். நிலைமை குறித்து அமெ. பிரமுகரிடம் புகார்

யாழ். குடாநாட்டு மககள் சமாதானம், அமைதிக்கான விருப்பத்தை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாத நிலையே இங்கு நிலவுகின்றது. அத்துடன் மக்களது அடிப்படை மனித உரிமைகளும் மதிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த அமெரிக்க பிரதித் தூதுவர் லூயிஸ் அம்லாமிடம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளான எஸ்.பரமநாதன், அ. க. சிவசுப்பிரமணியம், அருட்பிதா சி ஜி.ஜெயக்குமார்ஆகியோர் எடுத்து விளக்கினர்.

யாழ்.கோவில்வீதியிலுள்ள யூ.என். டி. பி செயலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது அமெரிக்க தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் திருமதி பத்மினி இராஜதுரையும் உடனிருந்தார்.

இச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ். குடாநாட்டு சமூக பொருளாதார நிலைமைகள் பற்றியும்,மீன் பிடித் தொழிலுக்கு மீனவரை அனுமதிப்பதில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறியிருந்தனர்.

பல்கலைக் கழக சமூகத்தினால் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் குடாநாட்டு மக்கள் பங்கு பற்ற அனுமதிக்கப்படாமை பற்றியும் யாழ். மாவட்டக் கத்தோலிக்க மக்களால் சமாதானத்துக்காக நடத்தத்திட்டமிட்ட ஊர்வலம் பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டமை பற்றியும் பிரதித்தூதுவரிடம் எடுத்து விளக்கியிருந்தனர்.

(வ-77)

# இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு யுத்தமே சரியான பரிகாரம்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு, இப் பிரச்சினைக்கு யுத்த மூலமே தீர்வு காணப்பட வேண்டும்.

தனது 80 வது பிறந்த தினத்தை கடந்த வியாழக் கிழமை கொண்டாடிய முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க மேற்கண்ட வாறுபகர்ந்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் இனப் பிரச்சினை என்ற ஒன்று இருந்தால் தமிழ் மக்கள் வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழ முடியுமா என்றும் வினா எழுப்பினார்.

அனைத்து இன மக்களும் இலங்கையில் சமாதானமாக வாழ்ந்து வருவதாகவும், இன ஐக்கியமு , பரஸ்பர புரிந்துணர்வும் நிலவுவதற்கு சகலரும் பாடுபட வேண்டும் என்றும் தெரிவித்தார்

முன்னாள் ஜனாதிபதியின் மேற்படி கூற்றுக் குறித்து சர்வதேச அரசியல் வல்லுநர்கள் பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்

(க-05)

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் 3ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவரை காணவில்லை என வைத்தியசாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 9 ஆம் திகதியன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்படி பெண் 11 ஆம் திகதி முதல் காணாமல் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எம்.நீலாதேவி (வயது 47) இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் யாழ்ப்பாணம் எனும் முகவரியுடையபெண்ணே காணாமல் போயுள்ளார். (உ-12)

## வடக்கு-கிழக்கு பாடசாலைகளுக்கு புதிய ஆசிரிய நியமனங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குபாடசாலைகளுக்கு விரைவில் மேலும்பல புதிய ஆசிரிய நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் கூடுதல் கவனம்செலுத்தவுள்ளோம்.

அதற்கேற்ப ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கவுள்ளோம்;

முன்பு 55 வீதமான ஆசிரிய நியமனங்களே வழங்கப்பட்டன. ஆனால் தற்போது 65 வீதமான ஆசிரிய நியமனங்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம.

புதிய கல்விச்சீர் திருத்தத்தின் படி வடக்கு- கிழக்கு பாடசாலைகளிற்கு வேண்டிய பல விதமான உதவிகளையும் செய்யவுள்ளோம்.

இவ்வாறு கல்வியமைச்சர் தெரிவித்தார். (செ)

## 2000ம் ஆண்டிற்கான கண்சிகிச்சை விருது

(கொழும்பு)

2000 ஆம் ஆண்டிற்கான கண் சிகிச்சை விருது பிரபல கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர். பரராஜசேகரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ் விருதினை அமெரிக்க நிறுவனம் ஒன்று வழங்கியுள்ளது.

இவர் நயினாதீவைச் சொந்த இடமாகக்கொண்டவர். (செ)

## கூடியசம்பளம் பெறுபவர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை

(கொழும்பு)

குறைந்த வேதனங்களைப் பெறுபவர்களுக்கு மாத்திரமே சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்என பொது நிர்வாக அமைச்சர் கலாநிதி ரிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

இத்தருணத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், செயலாளர்கள், ஏனைய உயர்மட்ட அதிகாரிகள்ஆகியோரின்சம்பளத்தை கூட்டும் தேவை தற்போது காணப்படவில்லையென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## விதவைகளுக்கு தையல் இயந்திரம் அன்பளிப்பு

### காவலூர் பி.ச. ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் சபை நிதியில் இருந்து விதவைகளுக்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறைப்பிரதேச சபையின் எல்லைக்குள், தையல் பயிற்சியினை பெற்ற நிலையில் உள்ள பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா தெரிவித்தார்

அந்தவகையில்சபைநிதியில் இருந்து முதற்கட்டமாக 10 விதவைகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சுய தொழிலினை மேற்கொள்வதற்கென இலவசமாக இவ்வாறான உதவிவழங்கப்படுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## புண்ணிய நாச்சியம்மை தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை, நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் புண்ணிய நாச்சியம்மையார் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி வண்ணை சிவன் கோவிலில் விசேட அபிஷேகமும் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பல விசேட நிகழ்ச்சிகளும் இடம்பெற்று பி.ப. 1.15 மணிக்கு மகேசுர பூஜையுடன் நிகழ்வு நிறைவுறும். (செ)

## முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமூக சேவைத்திணைக்களத்தினால் இரண்டு பேருக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகத்தில் வைத்து முச்சக்கர வண்டியினை வைபவரீதியாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்ஜே.எக்ஸ் செல்வநாயகம் கையளித்தார்.

பதினொராயிரம் ரூபா பெறுமதியான முச்சக்கரவண்டிகளை காரைநகரைச் சேர்ந்த புஸ்பராணி செல்லத்துரை, எழுவைதீவைச்சேர்ந்த முருகன் கதிர்காமன் ஆகிய இருவருக்குமே வழங்கப்பட்டுள்ளன. (உ-75)

## ஒறேற்றர் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ் பூத்த முன்னை நாள் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக விசேடவைபவம் நாளை செவ்வாய்க் கிழமை பி.ப 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் கே.சிவாஜிதலைமையில் நடைபெறவுள்ளது

இவ் வைபவத்தில் இளைப்பாறிய ஆசிரியர் ஞானச்சந்திர மூர்த்தி தொடக்கவுரையை நிகழ்த்துவார்.

ஒறேற்றர் நினைவுப்பேருரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் நச்சினார்க்கினியர் கல்வியும் மனித ஆளுமையும் என்ற தலைப்பில் ஆற்றவுள்ளார்.

கல்லூரி ஆசிரியர் ஆறு திருமுருகன் நிறைவுரை நிகழ்த்துவார். (உ-7)

## செய்தித் துளிகள்

### திருப்பணி

(வலிகாமம் வலியங்காடு)

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள மூத்த விநாயகர் ஆலயத்திற்கென புதிய வாகனசாலை அமைக்கும் திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(உ-54)

### சமுர்த்தி வலயம்

[மந்திகை]

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் சமுர்த்தி வலயம் ஒன்றின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சமுர்த்தி முகாமையாளர் இ அன்ரனி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்பிரதேசசெயலர் ஆ சிவசுவாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [உ-23]

### கைகலப்பில் கால் முறிவு

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு கைகலப்பாக மாறியதில் மைத்துனரால் தாக்கப்பட்ட ஒருவர் கை, கால் முறிந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கடந்த வெள்ளியன்று மண்டைதீவில் இடம்பெற்ற சம்பவத்தில்அதே இடத்தைச் சேர்ந்த கடற்றொழில் புரியும் இளைஞர்ஒருவரே கை,கால் முறிந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-104)

### பிற்போடப்படும்?

(கொழும்பு)

மார்ச் மாதம் 8ம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவிருந்த வரவு செலவுத் திட்டம் பிறிதொரு திகதிக்கு ஒத்திப்போடப்படலாம் எனத் தெரியவருகிறது.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்படாததினால் அடுத்த 22ம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது சம்பந்தமாக ஆராயப்படவிருப்பதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

### ஆலயத்தில் சிரமதானம்

(ஈச்சமோட்டை)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை கண்ணகையம்மன் ஆலய சூழல் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

மூளாய்வீதி மகளிர் இலக்கிய வட்டமும் ஆலய தொண்டர் சபையும், ஆலய பரிபாலன சபையும் இணைந்து மேற்படி சிரமதானப் பணியினை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை சிவராத்திரி தினத்தன்று இவ் ஆலயத்தில் விசேட இரவுப் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

### மிதிவெடியில் கால்இழப்பு

(மந்திகை)

வீடுபார்க்கச் சென்றபெண்மணி மிதிவெடியில் தனது கால் ஒன்றை இழந்த சம்பவம் கடந்த வியாழனன்று எழுதுமட்டுவாள் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

தம்பிராசா சரஸ்வதி (வயது-53) என்பவரே வலது கால் துண்டிக்கப்பட்டும், இடதுசையில் படுகாயங்களுடனும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-23)

### பொதுக் கூட்டம்

[இணுவில்]

வலிகாமம் தெற்கு பிரதேச இளைஞர் கழக சமமேளனம் புனர் அமைப்பு பொதுக் கூட்டம் இன்று பி.ப. 4.00 மணிக்கு சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியா சாலையில் நடைபெறவுள்ளது

[உ-49]

### குருக்கள் வீட்டில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணையில் அமைந்துள்ள கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயப் பூசகர் து. விவேகானந்தம் குருக்கள் வீட்டில் கடந்த வியாழன் அதிகாலை வேளை மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது;

அதிகாலை வேளை வீட்டின் கதவைத் திறந்து வெளியே வந்த சிறுமி திருடரைக் கண்டு கூக்குரலிடவே திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

குருக்கள் வீட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவதுதிருட்டு முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது. (உ-104)

### முப்படைகளும் ஒத்திகை

(கொழும்பு)

திடீர்த்தாக்குதல் நடவடிக்கைகளை சமாளித்து, எவ்வாறு பதில்த் தாக்குதலை மேற்கொள்வது பற்றிய முப்படைகளுக்கான பயிற்சி ஒத்திகையொன்று நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை பகுதியில் நடைபெற்றது.

இவ் ஒத்திகைப் பயிற்சியில் தரை, கடல், வான் படைப் பிரிவினருடன், தீயணைப்பு படையினரும், கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பாதுகாப்பு பிரிவினரும் ஈடுபட்டனர். (இ)

### வழக்கு ஒத்தி வைப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பந்தமான வழக்கு விசாரணைகள் மார்ச் மாதம் 19, 20, 21 ஆகிய திகதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணைகளின் போது சாட்சியமளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சாட்சியம் முடிவுற்றதையடுத்து, அடுத்த மாதத்திற்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (வ)

### திடீர் சோதனை

(சங்கானை)

சித்தன்கேணி, உடுவில் பகுதிகளில் கடந்த வெள்ளியன்று படையினர் திடீர் வீதிச் சோதனைகளில் ஈடுபட்டனர். [உ-124]

### விளையாட்டு போட்டி

[செம்பியன்பற்று]

யா/ அம்பன் அ. மி. த.க பாடசாலையில் வருடாந்த இல்லமெய்வல்லுனர்போட்டி இன்று திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் மு சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் சு. ஈஸ்வரபாதம், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (உ-42)

## இன்று ஒரு தகவல்

# கருணையின் உருவம்

சிவாஜியின் குருவாக விளங்கியவர் சமர்த்தராமதாச சுவாமிகள் ராமதாசர் ஒவ்வொருநாளும் சில வீடுகளில் பிச்சை வாங்கப் போவது வழக்கம். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நின்று சுலோகங்களைக் கூறுவார். ஒரு நாள் ஒரு வீட்டுக்குப் போனார். அந்த அம்மையார் சாணமிட்டு வீடு மெழுகிக் கொண்டிருந்தார் தம் வீட்டு வாசலில் சுவாமிகள் வந்து நின்றதும், என்ன காரணத்தாலோ சீற்றமடைந்து தம் கையிலிருந்த சாணிச் சுருணையை, மெழுகிக் கொண்டிருந்த துணியை அவர் மீது வீசி விட்டார் சுவாமிகள் பதில் எதுவும் பேசாமல் அதனைக் கையில் எடுத்துக் கொண்டார். ஆச்சிரமத்துக்கு வந்து சேர்ந்தார்.

அந்தத் துணியை நன்றாக அழுக்குப் போகக் கசக்கினார். காய வைத்தார். பிறகு அதிலிருந்த நூல்களையெல்லாம் தனித்தனியே எடுத்து விளக்குத் திரியாக ஆக்கி, சுவாமி சந்நிதிக்குச் சென்று அதைக் கொண்டு விளக்கேற்றி விட்டு 'ராமா' அந்த அம்மையாருக்கு என்ன குறையோ கோபமோ தெரியவில்லை அவளது வாட்டத்தைப்போக்கு' என்று பிரார்த்தித்தார்.

நன்றி
தெய்வீகக்கதைகள்

# ஜே 66 கூ.ச. கிளை செயற்பாடில்லை பொருட்கள் பெறுவதில் பொதுமக்கள் சிரமம்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து மூன்று மாதங்கள் கடந்து விட்ட போதிலும் அப்பகுதியின் கூட்டுறவுச் சங்கக்கிளை [ஜே/66 கிராமசேவகர்பிரிவு] திறக்கப்படாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் தொண்ணூறு சதவீதமான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளதுடன் பாஷையூர், கொழும்புத்துறையைச் சேர்ந்த பெருந்தொகையான மக்களும் இப்பகுதியில் தற்காலிகமாக வந்து வசித்து வருகின்றனர். இதனால் ஈச்சமோட்டைப் குதியில் மக்கள் தொகை அதிகாரித்துள்ளது.

அத்துடன், இப்பகுதியில் முன்னைய காலங்களில் இயங்கி வந்த தனியார் கடைகளும் வழமை போல திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் இதுவரை சங்கக் கிளை திறக்கப்படாதுகாணப்படுவதோடு சங்கக் கிளை இயங்கி வந்த கட்டடப் பகுதியும் பற்றைக் காடாகக்காட்சியளிக்கின்றது.

இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது இடம் பெயர் நிவாரணங்களைப் பெறுவதற்கு தாம் முன்னர் இடம் பெயர்ந்து வசித்தபகுதிகளில் இயங்கும் யாழ் கிளைகளுக்கு பல மைல் தூரம் சென்று பொருட்களைப்பெற வேண்டியுள்ளது.

அத்துடன் சிலர் இந் நிவாரணத்தை பெறுவதற்கு செல்லும் வசதியின்மையால் அதை இழக்கவும் நேரிடுகின்றது

இது சம்பந்தமாக ஈச்சமோட்டை மக்களால் தெரிவு செய்யப்பட்ட கிளைக் குழுத் தலைவர் டி ஏ எம் குணசிங்கம் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருடன் பல தடவைகள் தொடர்பு கொண்டு பிரச்சினைகளைத் தெரியப் படுத்தி உடன்சங்கக் கிளையை ஈச்சமோட்டையில் பழைய இடத்தில் திறக்க ஏற்பாடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ள போதிலும் தொடர்ந்து அவர்கள் தரப்பில் சாக்குப் போக்குச் சொல்லி செயற்படாது உள்ளார்.

(உ-59)

## வாய்த்தர்க்கம் துப்பாக்கிச்சூட்டில் முடிவு படைவீரர் பலி

[மந்திகை]

பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த படையினரிடையே எழுந்த கருத்து முரண்பாடு துப்பாக்கிப் பிரயோகம் வரை சென்றதில் கோப்ரல் தரத்திலுள்ள ஒருவர் சூட்டுக்கு பலியானார்.

கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்ற இச் சம்பவத்தில் கிளாலி முன்னரங்க நிலைய பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த லான்ஸ் கோப்ரல் லால் சிசிகுமார என்பவரே சம்பவ இடத்திலேயே பலியானவராவர் [உ-23]

## தமிழர்கைது, சித்திரவதை விபரம்கையளிக்கப்பட்டது

(கொழும்பு)

கொழும்பில் காரணங்கள் எதுவுமின்றி அநாவசியமாகக் கைது செய்யப் பட்டு சித்திரவதைக்குள்ளான தமிழர்களின் பெயர்ப் பட்டியல் கொழும்புவாழ் தமிழர் பணிக் குழுவினால் பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகேயிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது.

அநாவசிய கைதுகள் சித்திரவதைதொடர்பாகவிபரம் தருமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டுக் கொண்டதை அடுத்தே இவ் விபரம் அவரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (வ)

## ★ யுத்தத்தில் வெற்றி காண இலங்கை இளைஞர்கள் படையில் சேரவேண்டும்

(கொழும்பு)

தற்பொழுதுநடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கு சிங்கள இளைஞர்கள் அர்ப்பணிப்பு சிந்தனையுடன்படையில் சேர்ந்து சேவையாற்ற முன்வரவேண்டும். இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோபண்டாரநாயக்காவின் பெயரில் மத்துகமவில் வைத்தியசாலை ஒன்றைஆரம்பித்துவைத்துப்பேசும் போது பிரதமர் இவ்வாறு வேண்டுகோள்விடுத்தார்.

சிங்கள மக்கள் குடும்பத்திட்ட கட்டுப்பாட்டை மேற்கொண்டமையினால் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதில்குறைவாக இருப்பதாகக்தெரிவித்தபிரதமர். ஐக்கியதேசியக்கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேரடித்தொடர்புஇருப்பதை சர்வதேச சமூகம்தற்போது அறிந்துள்ளதென்றும், இதுவரை புலிகளுக்கும், தமக்கும் தொடர்பு இல்லை என ஐக்கியதேசியக் கட்சி அறிக்கை விடவில்லை எனவும் பிரதமர் ரட்ணசிறி அங்கு மேலும்பேசுகையில் குற்றமசாட்டியுள்ளார். [வ]

## யாழ் முஸ்லிம்களின் கடைகள் அவர்களிடம் வழங்கப்படும்

(கொழும்பு)

யாழ்ப்பாண முஸ்லிம்களுக்குச் சொந்தமாகஇருந்த சகலகடைகளும்அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும்.

யாழ் மாநகரசபை மேயர் என். ரவிராஜ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் யாழ் கிளையினரிடம் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் எல்லோரும் சென்று தங்கள் கடைகளைத் திறக்கமுடியாத சூழ்நிலை இருப்பதனால் அக்கடைகளுக்கு வரிகளைச் செலுத்தி கடைகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வரிகளை முழுமையாக செலுத்த முடியாதவர்களுக்கு தவணை அடிப்படையில் செலுத்துவதற்கும் வசதி செய்து கொடுக்கப்படுமென்று என். ரவிராஜ் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் சென்ற தூதுக்குழு கொழும்பிலயாழ். மேயரைச் சந்தித்து யாழ் முஸ்லிம் வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளது. (வ-செ)

## ச.ச. நிலையம் செயற்படுகிறது

(கல்வியங்காடு)

நீண்டகாலமாக செயற்பாடின்றி இருந்த கல்வியங்காடு சங்கிலியன் சனசமூக நிலையம் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களின் முயற்சியால் வழமையான தனது பணிகளை ஆரம்பித்துள்ளது.

இந்த வகையில் முழுநிலாக் கருத்தரங்கு நடத்தவும் திட்டமிட்டு வருகின்றனர்.

(உ-54)

## ஆயிரத்து 813 குடும்பங்களுக்கு வீடுகள்

[கொழும்பு]

யாழ் மாவட்டத்தில் 48 நலன்புரி நிலையங்களில் வாழும்ஆயிரத்து813குடும்பங்களுககு அடிப்படை வசதிகளைக்கொண்ட தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துவருவதாக யாழ் மாவட்ட ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜ தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டபுனரமைப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சில் அண்மையில் நடைபெற்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(உ-4)

## முன்னோடி பாடசாலை

[கொழும்பு]

ஒவ்வொரு பிரதான நகரத்திலும் முன்னோடி ஆரம்பப் பாடசாலை அமைக்க வேண்டுமென கல்வி அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த அறிவித்துள்ளார்.

[உ-7]

## நினைவு கல்விக் கருத்தரங்கு

(இணுவில்)

முன்னாள் ஆசிரியர் அமரர் பண்டிதர் வ. நடராஜா அவர்களின் நினைவாக கல்விக் கரு தரங்கு வரும் 21ம் திகதி புதன்கிழமை மு. ப. 9மணி தொடக்கம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. ஞானச் சந்திரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இடைநிலை வகுப்புக்களில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கற்பித்தலில் உள்ளபிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் எனும் பொருளில் யாழ்.வலயவிஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் ச. இரவீந்திரநாதன் கருத்துரை வழங்குவார். நினைவுரையினை உடுவில் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் ஆற்றுவார். (உ-49)

## வயிற்றுவலி காரணமாக பள்ளி மாணவி மரணம்

[யாழ்ப்பாணம்]

வயிற்றுவலி காரணமாக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவி கடந்த சனியன்று மரணமாகியுள்ளார்.

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலய தரம் 2 மாணவியான விஜயகுமார் டிலானி (வயது 7) எனும் சிறுமியே மரணமடைந்தவராவார்.

(உ-12)

## ஹஜ் யாத்திரிகர் கட்டுநாயக்காவில்

(கொழும்பு)

இந்தோனேசியாவிலிருந்து ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிக் கொண்டு ஜப்பான் புறப்பட்ட விமானம் ஒன்றில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கப்பட்டது.

முன்நூற்றி10 பிரார்த்தனையாளர்களுடன் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானத்தின் பயணிகள் பிறெய்ன் விமானத்தில் ஏற்றப்பட்டு ஜப்பானுக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-5)

## புலிகள் மீதான தடை பேச்சைக் குழப்பும் முயற்சி மௌலானா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டுமென இலங்கையரசாங்கம் வெளி நாடுகளை வலியுறுத்துவது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குழப்புவதற்கான முயற்சியாகவே கருதப்படுகிறது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மௌலானா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்து இன்று முக்கியமான தல்ல சர்தேச நாடுகள் மூலமாக அழுத்தத்தைக் கொடுத்து அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதே தற்போதைய அவசிய தேவையாகுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## 19 வயதுப் பிரிவு கரப்பந்துப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துவெற்றி

(சுண்டுக்குளி)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வந்த கரப்பந்தாட்டப்போட்டித் தொடரில், 17வயதிற்கு உட்பட்ட பிரிவுக்கான இறுதி ஆட்டம்கடந்த வெள்ளியன்று சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இறுதி ஆட்டத்தில் ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் அதனை எதிர்த்து ஆடிய மானிப்பாய் மெமோறியல் அணியை 3:0 என்ற செட்கணக்கில்தோற்கடித்து வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 19வயது பிரிவு ஆட்டத்தில் ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய அணியை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3 0 என்ற செட் கணக்கில் வென்று சம்பியனானது.

இவ்விரு ஆட்டங்களுக்கும் மத்தியஸ்தர்களாக கே.மனோகரன், பி.ரி செல்வராஜா ஆகியோர் கடமையாற்றினார்கள்

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ தற்பரானந்தன் கலந்து கொண்டார்.

(உ-110)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

பெப் மாதம்16 – ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 154943 சி | 158093 ஏ |
| 158093 பி | 156093 சி |
| 158268 ஏ | 158268 பி |
| 158268 சி | 158268 டி |
| 158268 ஈ | 158295 ம |
| 160009 ஏ | 160282 ஏ |
| 160282 பி | 160282 சி |
| 160282 டி | 162407 ஏ |
| 162412 ஏ | 162412 பி |
| 162412 சி | 162461 ஏ |
| 164462 ஏ | 164614 ஏ |
| 164709 ஏ | 164807 ஏ |
| 164883 ஏ | 164963 ஏ |
| 165019 ஏ | 165024 ஏ |
| 165024 பி | 165098 ஏ |
| 165098 பி | 165145 ஏ |
| 165 45 பி | 165147 ஏ |
| 165221 ஏ | 165267 ஏ |
| 165267 பி | 165279 ஏ |
| 166279 பி | 167292 ஏ |
| 167409 ஏ | 167409 பி |
| 167409 சி | 167409 டி |
| 167409 ஈ | 169501 ஏ |
| 172533 ஏ | 172533 பி |
| 172533 சி | 172533 டி |
| 172533 ஈ | 174247 ஏ |
| 174247 பி | 174252 ஏ |
| 174252 பி | 174252 சி |
| 174417 ஏ | 174490 ஏ |
| 174491 ஏ | 174491 பி |
| 174643 ஏ | 174643 பி |
| 174643 சி | 174643 டி |
| 176064 ஏ | 176087 ஏ |
| 176087 பி | 176 87 சி |
| 176087 டி | 176098 ஏ |
| 176098 பி | 176098 சி |
| 176102 ஏ | 176133 ஏ |
| 176146 ஏ | 176193 ஏ |
| 176193 பி | 176193 சி |
| 176193 டி | 176193 ஈ |
| 176198 ஏ | 176238 ஏ |
| 176238 பி | 176449 ஏ |
| 176449 பி | 176449 சி |
| 176449 டி | 176449 ஈ |
| 176504 ஏ | 177577 ஏ |
| 177578 ஏ | 177603 ஏ |
| 177611 ஏ | 177640 ஏ |
| 177644 ஏ | 177644 பி |
| 177644 சி | 177665 ஏ |
| 177689 ஏ | 177699 ஏ |
| 177703 ஏ | 177703 பி |
| 177703 சி | 177755 ஏ |
| 177847 ஏ | 177847 பி |
| 177878 ஏ | 177883 ஏ |
| 177883 பி | 177887 ஏ |
| 177887 பி | 177887 சி |
| 170894 ஏ | 177894 பி |
| 177894 சி | 177907 ஏ |
| 167907 பி | 177907 சி |
| 177912 ஏ | 177912 பி |
| 177912 சி | 177986 ஏ |
| 180546 ஏ | 181103 ஏ |
| 181297 ஏ | 181317 ஏ |
| 181325 ஏ | 182468 ஏ |
| 182468 பி | 182468 சி |
| 182468 டி | 182529 ஏ |
| 182552 எ | 182552 பி |
| 182552 சி | 183698 ஏ |

## உடுவில்

| | |
|---|---|
| 177243 ஏ | 179528 ஏ |
| 179528 பி | 179528 சி |
| 179528 டி | 179561 ஏ |
| 179561 பி | 179561 சி |
| 179561 டி | 179562 ஏ |
| 179562 பி | 179615 ஏ |
| 179615 பி | 179660 ஏ |
| 179660 பி | 179676 ஏ |
| 179697 ஏ | 179697 பி |
| 179761 ஏ | |

பெப். மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

## சங்கானை

| | |
|---|---|
| 170123 ஏ | 175096 ஏ |
| 181389 பி | 181403 ஏ |
| 181486 ஏ | 181486 பி |
| 181486 சி | 181486 டி |
| 181489 ஏ | 181525 ஏ |
| 181525 பி | 181629 ஏ |
| 181658 ஏ | 181864 ஏ |
| 181864 பி | 182582 ஏ |
| 182582 பி | 182649 ஏ |
| 182656 சி | 182656 டி |
| 182656 ஈ | 182695 ஏ |
| 182695 பி | 182715 ஏ |
| 182768 ஏ | 182768 பி |
| 182768 சி | 182863 ஏ |
| 183250 ஏ | 183280 ஏ |

## யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 163078 ஏ | 175677 ஏ |
| 178423 ஏ | 178503 ஏ |
| 180077 ஏ | 180253 ஏ |
| 180253 பி | 180301 ஏ |
| 180301 பி | 180301 சி |
| 180301 டி | 180301 ஈ |
| 181820 ஏ | 181892 ஏ |
| 181892 பி | 181892 சி |
| 181892 டி | 181892 ஈ |
| 181894 பி | 181894 சி |
| 181897 ஏ | 181905 ஏ |
| 181908 ஏ | 181908 பி |
| 181915 ஏ | 181924 ஏ |
| 181924 பி | 181952 ஏ |
| 181966 ஏ | 18 974 ஏ |
| 181974 பி | 181974 சி |
| 181984 ஏ | 181987 ஏ |
| 181987 பி | 181987 சி |
| 181994 ஏ | 181996 ஏ |
| 182037 ஏ | 182053 ஏ |
| 182063 ஏ | 182086 ஏ |
| 182086 பி | 182156 ஏ |
| 182156 பி | 182156 சி |
| 182195 ஏ | 182195 பி |
| 184383 எ | |

## ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 182591 ஏ | 14583 ஏ |
| 14585 ஏ | 14585 பி |
| 14810 ஏ | 14643 ஏ |
| 14688 ஏ | 14688 பி |
| 14700 ஏ | 14701 பி |
| 14701 சி | |

## நெடுந்தீவு

| | |
|---|---|
| 14592 ஏ | 14661 ஏ |

## கோப்பாய்

| | |
|---|---|
| 170534 ஏ | 177453 ஏ |
| 177453 பி | 177453 சி |
| 181789 ஏ | |

## நல்லூர்

| | |
|---|---|
| 178033 ஏ | 178033 பி |
| 180027 ஏ | 181810 ஏ |
| 181823 ஏ | 181910 ஏ |
| 181910 பி | 181972 ஏ |
| 181972 பி | 182056 ஏ |
| 182056 பி | 184386 ஏ |
| 179188 ஏ | 179188 பி |
| 179190 ஏ | 179190 பி |
| 179238 ஏ | 179319 ஏ |
| 179319 பி | 179319 சி |
| 179385 ஏ | 179385 பி |
| 179385 சி | 179473 ஏ |
| 181484 ஏ | 181484 பி |
| 182631 ஏ | 182656 ஏ |
| 182656 பி | 182676 ஏ |
| 182676 பி | 182820 ஏ |
| 182830 ஏ | 183049 ஏ |
| 183049 பி | 183049 சி |
| 183049 டி | 183049 ஈ |
| 183058 ஏ | 183107 ஏ |
| 183107 பி | 183108 ஏ |

## பருத்தித்துறை

| | |
|---|---|
| 183555 ஏ | |

## சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 178617 ஏ | 178617 பி |
| 178707 ஏ | 178707 பி |
| 178707 சி | 179185 ஏ |
| 179185 பி | 179250 ஏ |
| 179288 ஏ | 179288 பி |
| 179382 ஏ | 179382 பி |
| 179424 பி | 179474 ஏ |
| 179487 ஏ | 179509 ஏ |
| 181506 ஏ | 181506 பி |
| 181507 ஏ | 181507 பி |
| 181509 ஏ | 181509 பி |
| 181509 சி | 181573 ஏ |
| 181573 பி | 181617 ஏ |
| 181634 ஏ | 181646 ஏ |
| 182577 ஏ | 182586 ஏ |
| 182587 ஏ | 182652 ஏ |
| 182652 பி | 182727 ஏ |
| 182727 பி | 182727 சி |
| 182727 டி | 182733 ஏ |
| 182764 ஏ | 182764 பி |
| 182782 ஏ | 182794 ஏ |
| 182794 பி | 182795 ஏ |
| 182809 ஏ | 182809 பி |
| 182845 ஏ | 182845 பி |
| 182845 சி | 182853 ஏ |
| 182868 ஏ | 182868 பி |
| 183064 ஏ | 183064 பி |
| 183069 ஏ | 183079 ஏ |
| 183079 பி | 183079 சி |
| 183130 ஏ | 183169 ஏ |
| 183169 பி | 183169 சி |
| 183225 ஏ | 183225 பி |
| 183251 ஏ | 183251 பி |

## தெல்லிப்பழை

| | |
|---|---|
| 175928 ஏ | 176926 ஏ |
| 178839 ஏ | 178839 பி |
| 179292 ஏ | 179292 பி |
| 179292 சி | 181409 ஏ |
| 181422 ஏ | 182690 ஏ |
| 182729 ஏ | 182729 பி |
| 182730 ஏ | |

## உடுவில்

| | |
|---|---|
| 175125 ஏ | 176785 ஏ |
| 176785 பி | 176785 சி |
| 178607 ஏ | 178607 பி |
| 178694 ஏ | 178694 பி |
| 178694 பி | 178792 ஏ |
| 178792 பி | 178792 சி |
| 178884 ஏ | 179202 ஏ |
| 179202 பி | 179310 ஏ |
| 179360 ஏ | 179360 பி |
| 181421 ஏ | 181476 ஏ |
| 191510 ஏ | 181510 பி |
| 182618 ஏ | 182624 ஏ |
| 182624 பி | 182719 ஏ |
| 182769 ஏ | 182769 பி |
| 182769 சி | 182822 ஏ |
| 182822 பி | 182822 சி |
| 182840 ஏ | |

## வேலணை

| | |
|---|---|
| 183110 ஏ | 14536 ஏ |
| 14536 பி | 14636 சி |
| 14536 டி | 14603 ஏ |
| 14603 பி | 14548 ஏ |
| 14648 பி | 14658 சி |
| 14702 ஏ | 14702 பி |
| 14702 சி | |

### பிரித்தானியாவில் அமுல் செய்யப்படும்

# பயங்கர வாத தடைச் சட்டம்

# பல அமைப்புக்களையும் தடுக்கும்

(கொழும்பு)

பிரித்தானியாவில் அமுல் செய்யப்படவுள்ள பயங்கர வாதத் தடைச் சட்டம் தொடர்பாக பல்வேறுமுரண்பாடான கருத்துக்கள் சர்வதேச அமைப்புக்களால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த சட்டத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மாத்திரமல்லாமல் ஹமாஸ் மற்றும் குர்திஸ் அமைப்புக்களும் தடைப்பட்டியலில் இடம் பெறலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமாக இன்று 19 ம் திகதி அளவில் வெளிவரவிருக்கும் இந்த சட்டம் தொடர்பாக பலத்த எதிர்ப்பும் உருவாகிவருகின்றது.

இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் மாற்றுக் கருத்துடையவர்களுக்கான பேச்சுச் சுதந்திரம்பிரித்தானியாவில் மறுக்கப்படும் நிலமை உருவாகுமென்று சர்வதேச மன்னிப்புச்சபையைச்சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்

விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு இலங்கை அரசாங்கம் வலியுறுத்தும் அதேவேளையில், லக்ஷ்சர்பகுதியில் 58 வெளிநாட்டவர்கள் பலியாவதற்கு காரணமான குண்டு வெடிப்பை நடத்திய இஸ்லாமிய குழுவை தடை செய்யுமாறு எகிப்துகோரியுள்ளது.

இந்த சட்டம் பிரித்தானிய முஸ்லிம்களுக்கும் பிரித்தானிய அரசாங்கத்திற்கு மிடையிலான உறவை நச்சாக்கும் என்று அல்முகாகுஜிதீன் ஆயுதக்குழுவின் லண்டன் அலுவலகத்தைச் சேர்ந்தசேக் ஒபேர்பக்கிரி முகமட் என்பவர் கண்டித்துள்ளார்.

இதேவேளையில், பிரித்தானியாவில இந்த பயங்கரவாதச் தடைச்சட்டம் மூலம் மனித உரிமைகளுக்கான ஐரோப்பியஒப்பந்தத்தை மீறுகின்றதென்றும் சர்வதேச மன்னிப்புச்சபைகுற்றம் சாட்டியுள்ளது.

பயங்கரவாதம் என்ற கருத்தினை அணு ஆயுத துஸ்பிரையோகம் செய்வோர் மற்றும் விலங்குகளின் உரிமைகளை மீறுவோரும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபைச் சட்டங்கள் கூறுகின்றன.

ஆனால் மாற்றுக் கருத்துக்கள் வெளிப்படுவதையே 7 அல்லது ஜனநாயக முறையிலான எதிர்ப்பு நடவடிக்கைகளையோ இந்தச் சட்டம் தடுக்காது என்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-5)

## செய்திப்பரல்

★ பிரேஸிலின் வடகிழக்கில் பாரியகாட்டுத் தீ ஏற்பட்டது இதனை அணைக்கும் முயற்சியில் 220 தீயணைப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

★ அமெரிக்காவில் 3 கொலைகளைப் புரிந்ததாக ஒப்புக்கொண்ட இரு கனேடியர்களை அமெரிக்காவிற்கு அனுப்ப கனடா நீதிமன்றம மறுத்துள்ளது.

★ ஈரானில் மதுபானம் அருந்தியமை, பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை ஆகிய குற்றங்கள் புரிந்த மூன்று இளைஞர்கட்கு தலா 180 கசைஅடிகள் வழங்கப்பட்டன.

★ புளோரிடா இந்தியர் ஒருவர் தனது இருபுதல்வர்களை காரோடு சேர்த்து நீரில் தள்ளிக் கொலைசெய்த குற்றத்திற்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

★ ஷான் தீவிரவாதிகளுக்கு உதவுவதைநிறுத்துமாறு மியன்மார் தாய்லாந்திடம் வலியுறுத்தியுள்ளது.

★ பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் அரசுகளுக்கு எதிராக இஸ்ரேல் முன்னாள் பிரதமர் கடும் கண்டனம்.

(செ-9)

## வீதி திருத்தம்

(நல்லூர்)

திருநெல்வேலி ச்சந்தியில் யாழ். நோக்கிச்செல்லும் பஸ் பிரயாணிகள் தரித்து நிற்கும் தரிப்பிடத்திற்குப் பக்கமாகக் குன்றுங் குழியுமாகக் காணப்பட்ட வீதிப் பகுதி செப்பனிடப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை இது விடயமாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-103)

# இணைய தளத்தில்இயங்கும் தமிழ் பல்கலை கழகம்

(சென்னை)

முதன் முதலாக இணையத் தளத்தில் இயங்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று தமிழ் நாட்டில் நேற்றுத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நேற்று சென்னையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதியால் தொடங்கி வைக்கப்பட்டது.

40 நாடுகளில் வாழும் 75 மில்லியன் தமிழர்களுக்கும் இந்தப் பல்கலைக்கழகம் உதவும் என்று இணையப் பல்கலைக்கழகத் தலைவர் வி. வ. குழந்தைசாமி தெரிவித்துள்ளார்.

தமிழ்வரலாறு, கலை, இலக்கியம், தமிழ்ப்பண்பாடு என்பவை குறித்து உலகெங்கனும் உள்ள மக்கள் அறிந்து கொள்ள இந்த இணையப் பல்கலைக்கழகம் உதவும் அதேவேளை பாடசாலை மட்டத்திலும் பட்டப்படிப்பு நிலையிலும் பாடங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க 9)

# குஜராத் பூகம்ப நிதிக்கு 100 கோடி ரூபா வசூல்

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக பிரதமரின் பூகம்ப நிவாரண நிதியில் 100 கோடி ரூபா வசூலாகி இருப்பதாக பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசு சாரா அமைப்புக்கள் பாடசாலைகள், பொதுத் துறை நிறுவனங்கள், திரையுலக நட்சத்திரங்கள்போன்றவற்றிடமிருந்து இந்த நிதி வசூலாகியிருப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம், குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள வழங்குவதில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் நிவாரணப் பொருட்கள் மக்களுக்கு சென்றடைவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், அரசு சாரா இயக்கமும் செய்த சேவை மிகவும் பாராட்டுதலுக்கு உரியது என்றும் மத்திய உள் துறை அமைச்சர் எல்.கே. அத்வானி தெரிவித்துள்ளார். (க-3)

# அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்க ஈராக் தயார்

(பாக்தாத்)

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது மீண்டும் தாக்குதல்நடத்துமேயானால்தகுந்த பதிலடி கொடுக்கப்படுமென அந் நாட்டு ஜனாதிபதியான சதாம் ஹுசேய்னும்அவரது உதவியாளர்களும் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஈரான் விமானங்கள் ஈராக் நாட்டின் மீதுகடும் விமானத் தாக்குதல் மேற்கொண்டதையடுத்தே ஈராக் அதிபர் மேற் கண்ட அறிவிப்பைவிடுத்ததாக பக்தாத் செய்திகள் தெரிவித்தன.

(க-7)

தேறற்க யாரையும் தேராது
தேர்ந்த பின்
தேறுக தேறும் பொருள்
குறள்

# வலம்புரி

## மருந்தின் அவசியம்

யாழ். குடாநாட்டு மக்களின் உயிர் காக்கும் நிலையமாக திகழ்வது யாழ். போதனாவைத்திய சாலை. இதன் சேவையை நம்பியே மக்கள் உள்ளனர். இந்நிலையில் இங்கு நிலவும் மருந்துத் தட்டுப்பாடுகள் அநியாயமான உயிரிழப்பிற்குக் காரணமாகி விடுகிறது. இதனால் மக்கள் மத்தியில் அச்சம் - வேதனை குடிகொண்டு விட்டது. உயிர் காக்க வேண்டிய நிலையத்தில் உயிர்காப்பு மருந்துகள், செயற்கைச் சுவாச வசதிகள் - கருவிகள் இல்லாவிடில் நடத்திக் கூட்டிச் சென்ற நோயாளர்களைகிடத்திக் கொண்டு வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இதனால் வைத்தியசாலை மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடுவர்

யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்வதை விட நம் வீட்டில் இருந்தே காரியத்தை முடித்து விடலாமென்ற எண்ணம் மக்கள் மத்தியில் தோன்றுமாயின் போலி மருத்துவம் தலை தூக்கி விடும். எங்கும் நோய்த்தொற்றுக்கள், மரணவீத அதிகரிப்பு என சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல்கள் தோன்றும்.

எனவே இது விடயத்தில் யாழ்.போதனாவைத்தியசாலை நிர்வாகம்- வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு - சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் - யாழ். செயலகம் என நான்கு தரப்பும் இணைந்து குடாநாட்டிற்கான மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகளைக் குறைவின்றி பெற்றுக் கொள்ள விசேட குழுவொன்றை நியமிக்க வேண்டும். அதன் மூலம் தேவையான மருந்துகளை கப்பல் பயணத்தின் கால இடைவெளி அறிந்து பெற்றுக் கொள்வதற்குவிசேட குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன் களஞ்சியத்தில் இருக்க வேண்டிய 'தாங்கிருப்பு' மட்டத்தை தொடர்ச்சியாகப் பேணுவதற்கும் இவ் விசேட குழு பொறுப்பாக இருக்க வேண்டும்.

இதை விடுத்து, ஐ. சி. ஆர். சி கப்பல் தாமதம், ஒட்சிசன் இம்முறை வரவில்லை யென்றெல்லாம் சாட்டுப்போக்கு கூறுவது உயிரிழப்பிற்கே வகை செய்யும்.

---

# மாணவர்கள் கல்வியில் தளராது முன்னேற

# தனியார் கல்வி நிறுவனங்கள் தடையானதா?

**நா. துஷாந்** (மீசாலை)

கல்வி என்பது விலை மதிக்க முடியாத எவராலும் அழிக்கவோ - அபகரிக்கவோ முடியாத அருஞ் செல்வம் ஆகும். 'ஞானம்' எனும் அடிப்படைக் கருவை பல வழிகளில் பாமர மக்கள் முதல் பண்பட்ட மனிதர் வரை கல்வி ஊடாக அறிந்து கொள்கின்றனர். பண்டைக் காலத்தில் ஞானிகளால், குரு குலம் மூலம் சீடர்களை கல்வி போதித்து உருவாக்கி அவர்கள் மூலமாக விரிவு படுத்தப்பட்ட உன்னத பணி நாளடைவில் பொது அமைப்புகளாக அதாவது வித்தியா சாலை, வித்தியாலயம், கல்லூரி, பல்கலைக்கழகம் என உருவெடுத்து சமுதாயம் மேம்படுத்தப்பட்டு வந்தது.

### தனியார் கல்வி நிறுவனங்கள்

இவ்வாறு வளம் பெற்று வந்த கல்விப் பாரம்பரியத்தில் காலத்தின் தேவை கருதி உருவானதே 'தனியார் கல்வி நிலையங்கள்' என்றால் மிகையில்லை முன்னர் குறிப்பிட்ட வித்தியாசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இலவச சல்விப் போதனை நிலையங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இத் தனியார் கல்வி நிலையங்கள் விளங்கிய போதும் மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றது.

ஆரம்ப காலத்தில் பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவனிடமும் தனித் தனியே கவனம் செலுத்த முடிந்த போதும் பெருகிய சனத்தொகை காரணமாக பாடசாலைகளில் மாணவர் தொகையும் அதிகரிக்க மாணவர்களை தனித்தனியே கவனிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கல்வியில் பின்னடைந்த மாணவர்களது ஒரு சில பெற்றோர் தமது பிள்ளைகளுக்கென ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்து கற்பித்தனர். இம் முயற்சியில் பலன் கிடைக்கவே பலரும் இதில் ஈடுபட்டு நாளடைவில் ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவே பலருக்கும் பொதுவாக ஒரு வீட்டில் அல்லது ஆசிரியர் வீட்டில் நடைபெற்ற இந் நடவடிக்கை சில சிக்கல்களை எதிர் கொள்ள நேரிட்டதால் பொது இடங்களில் வெற்றுக் காணிகளில் 'கொட்டில்கள்' அமைத்து இயங்கத் தொடங்கின.

### இலாப நோக்கம்

இக் கல்வி முறையில் சிறந்த பயன் கிடைக்கவே பலரும் இதில் ஈடுபட முனைந்தனர். இதனால் இது காலப்போக்கில் வர்த்தக மயமானது. ஒரு சில இடங்களில் பிரபலமடையத் தொடங்கியதும் பெரும் இலாப மீட்டும் நோக்கில் பலரும் ஆங்காங்கே நாலு 'பந்தல்' நட்டு ஐந்தாறு வாங்கு மேசைகளைப் போட்டு ஒரு சில பிரபல ஆசிரியர்களைக் கொண்டு 'ரியூட்டறிகளை'' ஆரம்பித்து நடத்தினர்.

### வேலை வாய்ப்பு

இவ்வாறு ''முழத்துக்கு முழம்'' அமையத் தொடங்கிய 'கொட்டில்கள்' ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் முறைப்படி கற்று பட்டம் பெறாத 'இளசு'' கள் சிலரையும் உபாத்தியாயராக்கின. இதனால் பலருக்கு இலகுவாக வேலை வாய்ப்பும், 'கொழுத்த சம்பளமும் கிடைத்தது. ஆரம்பத்தில் சகல பாடங்களுக்கும் 'இவ்வளவு' என ஒருதொகையுடன் இருந்த போதும், நாளடைவில் ஒரு பாடத்திற்கு இவ்வளவு என்று 'வளர்ச்சியடைய' பெற்றோர்பாடு படு திண்டாட்டமாகியது. எனினும் இதனால் ஏற்பட்ட நல்ல 'பெறுபேறுகள்' அவர்களைத் திருப்திப்படுத்தியது.

### சீர்கேடுகள்

இவை ஒருபுறமிருக்க, இத் தனியார் கல்வி நிலையங்களின் பெருக்கத்தால் பல சீர்கேடுகளும்வளர்ச்சி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. தாம் பணம் கொடுக்கிறோம் என்ற நினைப்பில் ஆசிரியர்களை அவமதித்து, எதிர்வாதம் செய்து மிரட்டி, உருட்டிய மாணவர்களும் உள்ளனர். இதை ரியூட்டறிகள் தட்டிக் கேட்க முனைந்த போது, வேறு ரியூட்டறிகளுக்கு ஒரு சிலர் மாறுவதை கண்ட நிர்வாகம் கண்டும் காணாமல் விடும் போக்கை கடைப்பிடிக்க தொடங்க இந்த 'ஒருசில' மாணவர்களின் கை ஓங்கத் தொடங்கியது. ஆசிரியர்களுடன் தகராறு, பெண்பிள்ளைகளுடன் சேஷ்டை, தளபாடங்களைச் சேதப்படுத்துதல் என வளர்ந்த இச் சீர்கேடுகள் ரியூட்டறிகளுக்கு வெளியேயும் முக்கியமாக பாடசாலைகளிலும் பரவ ஆரம்பித்தன. இதை தடுக்க முடியாமல் போனமைக்கு பாடசாலைகளில் இருக்கும் ஒரு சில ஆசிரியர்கள் ரியூட்டறிகளில் கற்பித்தமையும் காரணமாகும்.

### பாதகமான விளைவுகள்

மேலும் இக் கல்வி நிலையங்களின் ஒரு சில போக்குகள் சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது. பரீட்சை பெறுபேறுகள். பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த கையோடு ரியூட்டறிகள் போட்டி போட்டுக் கொண்டு சிறந்த பெறுபேறுகளையும், சித்திபெற்ற மாணவர்களையும் மட்டும் எடுத்து அவர்களின் பெயர்களைப் பத்திரிகைகளில் போட்டு தம்மை விளம்பரப்படுத்தி பிரபலமடைந்தன. எஞ்சிய சித்தியடையாத மாணவர்கள் பாடசாலையின் கற்பித்தல் திறமையை வெளிப்படுத்துபவர்களாக சித்தரிக்கப்பட்டனர். இதனால் கடமையுணர்வோடு பணியாற்றிய சில ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டனர். அவர்களது பணி கொச்சைப்படுத்தப்பட்டன.

### ஆசிரியர்களை மதியாமை

இது போலவே ஆசிரியர்களை மாணவர்கள் சிறந்த முறையில் கனம் பண்ணாமைக்கு இன்னுமொரு காரணமும் உண்டு. முன் கூறியபடி முறையாக பயிலாத சில இளம் ஆசிரியர்கள் மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் கூற முடியாமல் திண்டாடி, பின் கவனத்தை திருப்ப பேச்சை மாற்றி வகுப்பை முடித்துக் கொண்ட சம்பவங்களும் உண்டு. இதில் வேடிக்கை என்னவென்றால் சில ஆசிரியர் (?) களைவிட மாணவர் திறமைசாலிகளாக இருந்தது தான். இதனால் மாணவர்கள் தாம் நினைத்த போது வகுப்பிற்கு வரவும், போகவும் பழகிக் கொண்டனர்.

சில இடங்களில் கண்ட படிகட்டணங்களை உயர்த்த முற்பட்டு மாணவர்களிடம் 'வேண்டிக் கட்டிய' ரியூட்டறிகளும், பேச்சுவார்த்தைகள் நடத்திய ரியூட்டறிகளும் உண்டு அதேபோல ரியூட்டறி விட்டுச் செல்லும் போது வீதியில் பெண்களுடன் சேஷ்டை, புரிந்த மாணவர்களைத் தண்டித்த அல்லது கண்டித்த ஆசிரியர்களும், பிறகும் 'மாணவர்' குழுக்களால் தாக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

### சிலமுன்மாதிரிகள்

இப்படியாக பல சாதக- பாதகங்களை தந்தும்- இன்றும் சமூகத்தில் செல்வாக்குடன் இயங்குகின்ற ரியூட்டறிகளில் சில சமூக முன்னேற்றத்திற்காக பாடுபடவும் செய்கின்றன. அத்துடன் மாணவர் மத்தியில் போட்டிகள், கலை நிகழ்வுகளை நடத்தியும் வருகின்றன. இன்று பாடசாலைகளில் நிலவுகின்ற குறை நிறைகளை நிவர்த்தி செய்கின்ற இடமாக தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுவதால் பெற்றோரும் தமது பிள்ளைகளை ஏதோ ஒரு ரியூட்டறிக்கு அனுப்பி வருகின்றனர். ஒரு மாணவன் பாடசாலைக்கு ஒரு நாள் செல்லாமல்விடுகின்ற போதும் ரியூட்டறிக்கு செல்லாமல் விடுவதில்லையாம். இதற்கு பாடசாலையில் இல்லாத சுதந்திரம் இங்கு கிடைப்பதே காரணமெனவும் தெரியவருகிறது.

இங்கு மாணவர்கள் சேர்வதும் ஒரு வினோதமான காரணத்தால் தான். அதாவது ஒரு ரியூட்டறி ஆரம்பமாகும் போது நாலைந்து பெண்கள் இருந்தால் போதுமாம் பின்னர் நாற்பதைம்பது பேர் சேருவினம். இது மட்டுமா? ஒரு பாடத்திற்கு இரண்டு மூன்று இடங்களுக்கு போவதும் இதன்காரணமாக வென்றும் கூறப்படுகிறது. இவை போட்டி மனப்பான்மையில் காணப்படுவதும் சுட்டிக்காட்டத்தக்கது. போட்டி பொறாமையாகி சில ரியூட்டறி கொட்டில்கள் எரிந்து சாம்பலாகியுமுள்ளன

### முக்கியதேவை

எது எப்படியோ எத்தனை தடைகளை எதிர் கொண்ட போதும் எமது சமூகக் கல்வியால் தொடர்ந்தும் தளராது முன்னேறுவதற்கு இத் தனியார் கல்வி நிறுவனங்களும் பெரும் பங்காற்றுகின்றன. என்றளவில் திருப்திப்படினும், சில சீர்கேடுகளை தடுத்து எதிர்ப்புகளை சமாளித்து ரியூட்டறிகள் செயற்படுமாயின வரவேற்கத்தக்கது. இதற்கு குடாநாட்டில் ஒரு சில கல்விநிறுவனங்களில் முயற்சி பாராட்டப்பட வேண்டியதோடு பின்பற்றப்படவும் வேண்டியதாகும்!

---

# இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தி மன்னாரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

## ஐ. நா. செயலாிற்கும் மகஜர் அனுப்பிவைப்பு

(மன்னார்)

நாட்டில் சமாதானம் ஏற்படக் கூடிய வகையில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று முன்தினம்பகல் 2.00மணியளவில் மன்னார் மடுப்பகுதியில் பேரணியொன்று நடைபெற்றுள்ளது.

இப்பேரணியில் இடம் பெயர்ந்து மடுத் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளவர்களும்,மற்றும் தட்சனாமடு, பண்டி விரிச்சான், கீரிசுட்டான்,பாலம்பிட்டி ஆகிய பிரதேசங்களையும், சேர்ந்த சுமார் ஏழாயிரம் பேர் வரையிலானோர் கலந்து கொண்டுள்ளனர்.

பேரணியின் இறுதியில் சர்வமதப் பிரார்த்தனையும் இடம் பெற்றுள்ளது.

பேரணியின் முடிவில் மன்னார் மாவட்ட பிரதேச செயலர்,மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர் ஆகியோரிடம் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி மகஜர்கள் ஐ. நாவின் செயலர் கொபி அனானிற்கும்,ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் அனுப்பிவைக்கப்பட உள்ளது.

(க-4)

# சிவராத்திரி தினத்தன்று

## ஊரடங்கை தளர்த்துக

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் அனுட்டிக்கப்படவுள்ள சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அன்று ஊரடங்கு உத்தரவை தளர்த்துமாறு இந்துசமயப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் சமாதானம் வேண்டி அன்றையதினம் பிரார்த்தனை நடத்தவும் மேற்படி அமைப்பு உறுதி பூண்டுள்ளது.

[க]

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா
ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1500]

# இருதரப்பும் யுத்தநிறுத்தம் செய்தால்
# கண்காணிக்க 9 நாட்டு பிரதிநிதிகள்
## நோர்வே அரசு திட்டம்

(கொழும்பு)
இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும், அதன் நம்பிக்கைத் தன்மையை அறிவதற்கும், இருதரப்பும் யுத்த நிறுத்தம் செய்யும் பட்சத்தில், அதனைக் கண்காணிக்க ஒன்பது நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைக்கொண்ட குழுவை நியமிக்க நோர்வே அரசு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கண்காணிப்புக்குழுவில் ஆசிய, ஐரோப்பிய நாடுகள் இடம்பெறுமென தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவும், யப்பானும் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுமாயின் அதனை அண்டைநாடான இந்தியா விரும்பவில்லையென ஏஜென்சி செய்தியொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு கடன் வழங்கும் முக்கிய நாடான யப்பான் இந்நாட்டின் விவகாரங்களைக் கண்காணிப்பதன் மூலம் எதிர்கால முதலீட்டு திட்டங்களை மேற்கொள்ள உதவுமென தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளுக்கு நிதி மற்றும் ஆயுத உதவிகளை வழங்கும் நாடுகள் இக்கண்காணிப்பு குழுவில் இடம்பெறுவதை அனுமதிக்கமுடியாதென இலங்கை அரசு நோர்வேக்கு தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் மேற்குறித்த நடவடிக்கைகள் குறித்து இதுவரை உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இ-5]

சாரங்கனின்
விஷேட விலைக்கழிவு
இன்று முதல் 07/03/2001
வரை உங்கள் ஓடர்களை
முன்கூட்டியே
பதிவு செய்யுங்கள்
**சாரங்கன்
நகைமாடம்**
45. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1503]

## தூதுக்குழு விஜயம்

(கொழும்பு)
பங்களாதேஷ் உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்களைக்கொண்ட தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

12 அங்கத்தவர்களைக் கொண்ட மேற்படி தூதுக்குழு உள்ளூராட்சி நிர்வாகம் விவசாயஅபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக ஆராயவுள்ளது. (க-09)

## கொழும்பு - வவுனியா
# புகையிரதத்தில் 14 பவுண் தங்க நகை கொள்ளை

(வவுனியா)
கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப்புறப்பட்ட புகையிரதவண்டியிலிருந்து பதினான்கரைப் பவுண்தங்கநகைகள் கொண்ட கைப்பையொன்று கொள்ளையர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவைச்சேர்ந்த முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி சீனிவாசகமும் அவரது மனைவியுமே இவ்வாறுதங்கப்பவுண் நகைகளைக் கொண்டகைப்பையை கொள்ளையர்களிடம் பறிகொடுத்தவர்களாவர்.

கடந்த 15ம் திகதி இரவு கொழும்பில் இருந்து புகையிரதம் மூலம் வவுனியாவுக்கு வரும் போதேஇக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக வவுனியா பொலிஸ்நிலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

**சட்டத்தை--.**
வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 125தமிழர்களும் சட்டத்தை தளர்த்தி தம்மைவிடுவிக்குமாறு நீதிஅமைச்சரையும் தமிழ்எம்.பிக்களையும் கோரியுள்ளனர். (ம

**பயங்கரவாத---**
றும் தெரிவித்துள்ளார்:

இதே வேளை அவரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்வீர்களா எனக் கேட்டதற்கு தன்னால் எந்தவொருஅமைப்பின் பெயரையும் வெளியிட முடியாதெனக் குறிப்பிட்டார். (இ-5)

**ஐரோப்பிய ----**
மான யுத்தநிறுத்தத்திற்கு இலங்கை அரசாங்கம் சாதகமான பதிலைக் கொடுத்து சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கேற்ற சூழலை உருவாக்கவேண்டும் என்றும் பத்துத் தமிழ்க்கட்சிகளும் தூதுக்குழுவினரிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**தமிழ்ச்செல்வன் - - -**
னத்தை விரும்பும் அதியுயர் பௌத்த பீடத்தைச் சேர்ந்த 32 பிக்குகளும் இதில் அடங்குவர்.

இத் தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகளின் தலைவர்களிடம் கையளிப்பதற்காக சமாதானச் செய்தி ஒன்றுடன் செல்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற விடுதலைப் புலிகளின் பகுதிக்கு இன்று காலை செல்லும இவர்களைமடுதிருப்பதியில் வைத்து மன்னார், யாழ் ஆயர்கள்வரவேற்கவுள்ளனர்.

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்சு.ப. தமிழ்ச் செல்வன், மற்றும் கரிகாலன் ஆகியோரைச் சந்தித்து அவர்களிடம் சமாதனச் செய்தியை கையளித்துப் பேசவுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் உள்ள அகதிகள் தங்கியுள்ள முகாம்கள்,மற்றும் உணவு சுகாதாரவசதிகள் பற்றிய நிலைமைகளை நேரில் கண்டறிவதுடன்அங்குள்ளபொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப்பேசவுள்ளனர்.

இப் பேச்சுக்களையடுத்து நாளை மறுதினம் புதன் கிழமை கொழும்புக்குதிரும்பி அங்கு ஜனாதிபதி சந்திரிக்கா மற்றும் பிரதமர் ஆகியோர்களை சந்திக்கவுள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

# யாழ்.மீனவர் பிரச்சினை
## டக்ளஸ் தலைமையில் மகாநாடு

(யாழ்ப்பாணம்)
வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் மற்றும் மீனவர்களது புனர் வாழ்வு அபிவிருத்தி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், விரைவில் உயர்மட்ட மாநாடொன்றுநடத்தப்படுமென்று வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு தமிழர் விவகார இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் குறித்து எதிர்வரும் 23ந்திகதி குடாநாட்டு மீனவ தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன்தான் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள், படை உயரதிகாரிகள்மற்றும் வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்புடன் தொடர்புடைய உயர்அதிகாரிகள் ஆகியோர் இம்மாநாட்டில்கலந்து கொள்வர். (இ)

### தமிழக மீனவர் படுகாயம்

(கொழும்பு)
இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தின்போது தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது நாகபட்டினத்தைச் சேர்ந்த முருகர் என்பவரேபடுகாயமடைந்துமதுரை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ந-5

**3-வது---**
ஆனால்அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்வதாகத்தெரியவில்லை இந்நிலையில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவநடவடிக்கையால் பாரியஇழப்புக்களைச் சந்தித்துவருவதாகவும் தமிழ்ச்செல்வன் தன்னிடம் தெரிவித்ததாக யாழ் ஆயர் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் கடந்த20 வருடகாலமாகநடைபெற்றயுத்தத்தால் கிடைத்த வரவேற்பிலும் நற்பெயரிலும்பார்க்க விடுதலைப்புலிகள் சமாதான முயற்சியை மேற்கொண்டுவரும்போதுஅதற்கு வரவேற்பு அளித்துவருகிறது.

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு எதிர்வரும் சனிக்கிழமைநள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையஇருப்பதால், மூன்றாவது தடவையாகவும் யுத்த நிறுத்தத்தை புலிகள் அறிவிக்கவேண்டுமென்று தமிழ்ச்செல்வனைத் தாம் கேட்டுக்கொண்டதாகவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வன்னிக்கான பொருளாதார தடைகளைப் போக்கவேண்டுமென்று இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் பலகல்லவிடம் யாழ் ஆயர் கேட்டுக்கொண்டுள்ளார், [ம]

**மூன்று - - -**
ளனர்.

மணல் ஏற்றும் போது பொலித்தீன் பையொன்று தென்பட்டதாகவும்.அதனை எடுத்துப் பார்த்தபோது அதற்குள் மூன்று மனித எலும்புக் கூடுகள் காணப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மனித எலும்புக் கூடுகள் கடந்த காலங்களில் மன்னாரில் காணாமல் போனவர்களுடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ந-5)

**யாழ்மாநகர---;**
சந்திக்கச்சென்ற சந்தை மேற்பார்வையாளர் ஒருவரை ஆணையாளர் தகாத வார்த்தையால் ஏசியதாகவும் இதனால் மாநகரசபை ஊழியர்கள் கடும் கோபமுற்றதாகவும் மாநகரசபை வட்டாரங்களில் செய்திகள் அடிபட்டன.

நிலமை இவ்வாறிருக்க தனது பணிக்கு தொடர்ந்தும் இடைஞ்சல்களையும் தடைகளையும்ஆணையாளர்விளைவித்துக் கொண்டிருந்தால் மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து தனது பதவியை முடிவுக்குக் கொண்டுவந்து விலகிச்செல்வதாக மாநகர சபையின் சுகாதாரவைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் மாநகர சபையின் முதல்வருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

யுத்தத்தின் மத்தியிலும் சுமுகமாக இயங்கிய யாழ். மாநகரசபை தற்போது சீர்குலைந்து வருவதாகவும், நிலைமை இப்படியாக சென்றால் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு யாழ் மாநகர மக்கள் பதிலடி கொடுத்தே தீருவார்களென்றும் வரியிறுப்பாளர் ஒருவர் வலம்புரிக்குக் கருத்துத் தெரிவித்தார். (ந)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2-00 மணிக்கு வித்தியாலய அதிபர் த. சிவராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் உயர்பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், கிராம உத்தியோகத்தர் சி. நித்தியானந்தராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கக்காப்பாளர் திருமதி ம. சண்முகதாஸ் பரிசில்களை வழங்குவார். (இ)

## மரண அறிவித்தல்

### கந்தர் பரதராசா

வலந்தலை காரைநகரைப் பிறப்பிடமாகவும் தொல்புரத்தை தற்காலிகவதிப்பிடமாகவும் கொண்ட க. பரதராசா 18-2-2001 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-02-2001 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது மகளின் இல்லத்தில் நடைபெற்று வில்லூன்றி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி - சரஸ்வதி,
மருமகன் - சேகர்.

22/2, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.
(வலம்புரி பத்திரிகை காரியாலயத்திற்கு அருகில்)
(சி 1506)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், பிரபுதேவா
நடித்த
உள்ளம் கொள்ளை
போகுதே
10-30, மட்டும் (ப. நே)
லிவிங்ஸ்டன், கரன்,
விவேக், வடிவேல்
நடித்த
எங்களுக்கும்
காலம் வரும்
2-30 மட்டும் (ப.நே)
(புதிய வெளியீடுகள்)
(கி 1482)

அதி நவீன
கருவிகள் மூலம்
ஒலிப்பதிவு செய்திடவும்
வீடியோ, ஸ்ரூடியோ,
மணப்பந்தல்
சேவைகளுக்கும்,
**மேகாஸ்
வீடியோ
அன்
ஓடியோ**
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1495)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.